ஸ்ரீ லோகதேசிகாநுக்ரஹ மாலிகா—மலர் 14.

ஸ்ரீ:

293

293

பரமபுருஷனுடைய ப்ரதிவஸ்து
பூர்ணத்வத்தைப்பற்றிய
பூருவாசாரியர்களின்
திருவுள்ளத்தை விளக்கிக்காட்டவல்ல

அத்புதசக்தி.

★

ஸ்ரீ காஞ்சி பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்
இயற்றியது.

★

காஞ்சீபுரம்
ஸ்ரீ ஸுதர்சன அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பெற்றது.
1948.
விலை 0-8-0.

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளேசரணம்

ஆழ்வாரெம்பெருமானார்ஜீயர் திருவடிகளே சரணம்

பரமபுருஷனுடைய ப்ரதிவஸ்துபூர்ணத்வத்தைப் பற்றி

ஸ்ரீ தேசிகன் முதலான பூருவாசாரியர்களின்

திருவுள்ளத்தை விளக்கிக் காட்டவல்ல

அத்புதசக்தி.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர்

இயற்றியது.

ச்லோ. தேசிகவந்தநமாலாத்விதீய புஸ்தகவிமர்சரூபமிதம்,
ஸகலவிபுதாபிநந்த்யம் ஸததம் ஜேஜேது ஜகதி க்ருதிரத்நம்.

முதல் அத்யாயம்.

பரம புருஷனொருவனுளனென்பதையும் அவனுடைய ஸ்வரூபரூப குணாதிகள் இப்படிப்பட்டவை யென்பதையும் நாம் சாஸ்த்ரங்களைக் கொண்டு அறிகிறோமேயல்லது வேறு எதனாலும் அறிகின்றிலோம். அதீந்த்ரியமான விஷயங்களில் நமக்கு சாஸ்த்ரமே கைவிளக்கு. அல்பஜ்ஞர்களான நாம் சாஸ்த்ரங்களில் நேராக இறங்கித் தத்துவங்களையும் மர்மங்களையும் உணர உரிமையுடையோமல்லோம். * சாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேசம் புத்தேச் சலநகாரணம், உபதேசாத் ஹரிம் புத்த்வா * என்று சாஸ்த்ரமே

காட்டின கட்டளையிலே, தத்வதர்சிகளான மஹாப்ராஜ்ஞர்கள், வெண்ணெய் கடைந்து திரட்டியெடுத்துக் கொடுக்குமாபோலே லலிதமாக எடுத்துரைத்து வைக்க, அது கொண்டு உணரவே நாம் அதிகாரிகள். எதிலும் எங்கும் ஸம்ப்ரதாய பேதமென்று ஒன்று தோன்றியிருப்பதனல் இன்ன ஸம்ப்ரதாயஸ்தர் இன்ன ஆசார்யருடைய ஸ்ரீ ஸூக்திகளையே நிதியாகக் கொள்வதென்றும் அவற்றையே போஷித்துப் பேசுவதென்றும் ஒரு பத்ததி இருப்பதனல் அவரவர்கள் தம் தம் ஆசார்யருடைய ஸ்ரீ ஸூக்திகளில் வைத்திருக்கிற நம்பிக்கையினல் திருப்பித்திருப்பி ஸ்வமதத்தையே வலிதாக வெளியிட்டுக் கொண்டு காலங்கழிக்கிருர்கள். இந்த மருமத்தை யாரோ சில மஹா மேதாவிகளே கண்டு 'இப்படி பக்ஷபாதிகளாய்ப் பேசியும் எழுதியும் போருகிறவர்களின் வார்த்தைகளில் நாம் செவி கொடுக்கவோ கண் செலுத்தவோ தகாது; மத்யஸ்தர்களான ஆசாரியர்களின் திருவாக்குக்களைக் கொண்டே தத்துவத்தை உணரவேணும்' என்று துணிந்து விவாதிகளான இரண்டு ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் பொதுவாகவுள்ள ஆசாரியர்களின் ஸ்ரீ ஸூக்திகளையே கொண்டு தத்வநிஷ்கர்ஷம் செய்கிருர்கள். இதுதான் ராஜமார்க்கம்.

உபய ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் பொதுவாகச் சில ஆசாரியர்கள் உலகமறிய விளங்குகின்ருர்களன்றே. ஸ்ரீ பாஷ்யகாரர், கூரத்தாழ்வான், பட்டர், ச்ருதப்ரகாசிகாசார்யர் என்னும் மஹாசார்யர்கள் பொதுவானவர்களென்பது நிர்விவாதம், விவாத க்ரஸ்தமான விஷயங்களை மத்யஸ்தத்ருஷ்டியுடன் நிஷ்கர்ஷிக்கவேண்டும்போது மேற்குறித்த மஹாசார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகள் எப்படியுள்ளன? என்று விமர்சிப்பதே ப்ராமாணிகர்களுக்கு

உற்றது. அவர்களின் திவ்ய ஸூக்திகளில் ஸ்பஷ்டமாகத் தெரியாத விஷயங்களிருந்தால் அவற்றில் அவரவர்கள் தம் தம் [அஸாதாரண] ஆசாரியரின் ஸ்ரீ ஸூக்திகளைக் கொண்டு தெளிவுபெறலாம். பொதுவான ஆசாரியர்களின் திருவாக்குக்களில் ஸ்பஷ்டமாகவும் ஸுஸ்பஷ்டமாகவும் விளங்குகின்ற விஷயங்களிற்கூட ஏகதேசிகளின் அபிப்ராயத்தையே திடமாகக் கொண்டு போராடுவதென்பது விவேகிகளின் பணியாகுமோ ?

சிலருடைய கொள்கை என்னவெனில், மற்றையாசாரியர்களின் திருவாக்குக்கள் எப்படியாவது இருக்கட்டும்; அவற்றைப்பற்றி நமக்கு விசாரமே வேண்டா; நமக்கென்று வாய்த்த அஸாதாரண ஆசாரியருடைய திருவாக்கில் ஸ்பஷ்டமாக எவ்வண்ணம் வெளிவந்துளதோ அவ்வண்ணமே தான் நாம் கொள்ளவேண்டும்—என்பதாக. இக்கொள்கையைத் தப்பென்று நாம் சொல்லலாகாது. ஸ்வாசார்ய பக்தியின் கனம் விளங்குமிதில். ஆனல் இத்தகைய கொள்கை ரஹஸ்யமாக ஸ்வக்ருஹத்தினுள்ளே போற்றத் தகுமே யன்றி ஸதஸ்ஸுக்குப் பயன்படாது. விவாதம் விளையாத வளவில் க்ஷேமமே. விவாதம் வளர்ந்திட்டால் ஸ்வாசார்ய ஸூக்தியென்கிற அபிமானத்தை வெகு தூரத்தில் விலக்கிவைத்திட்டு, பொதுவான ஆசாரியர்களின் ஸ்ரீ ஸூக்திகளை மாத்திரமே தஞ்சமாகக் கொள்ளவேணும்.

இனி ப்ரக்ருத விஷயத்திற்கு வருவோம். எம்பெருமான் எங்கும் நிறைந்த பரஞ்சோதி யென்று உலகமனைத்தும் உணரும். "கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையும் ஒருதனி நாயக மென்றால் உன் பெருமைக்கு

அளவாமோ? " என்று போற்றுகிறார்கள் பக்தர்கள். அணுவான பதார்த்தங்களினுள்ளும் பகவான் நிறைந்துளன் என்பது வேதாந்திகளின் கொள்கை. (1) உட்புறம் வெளிப் புறம் என்று இரண்டிடங்கள் பகுத்து வகுத்துக்காட்டக் கூடிய பொருள்களாயிருந்தால் அவற்றில் உள்ளேயும் புகுந்துளன் என்று ஒப்புக் கொள்ளலாம்; அணுபதார்த் தங்களுக்கு இங்ஙனே பகுத்துக் காட்டக்கூடிய நிலைமை இல்லாமையால் அப் பொருள்களில் பகவான் உள்ளே யுளன் என்று ஒப்புக் கொள்ள இயலாது—என்பது ஒரு ஆக்ஷேபம். (2) உள்ளேயுளன் என்று ஒப்புக் கொள்ளக் கூடிய விடத்திலும், பகவான் தன்னுடையஸ்வ ரூபம் எவ்வளவுண்டோ அவ்வளவும் அடங்க வியாபித் துளன் என்று இசையத்தகாது; ஏனென்றால் ஒரு வஸ்துவி லேயே பகவானது ஸ்வரூப மடங்கலும் அடங்கிப் போகு மானல் மற்றும் உலகிலுள்ள அபரிமிதங்களான வஸ்துக் களிலும் அந்த ஸ்வரூபம் வியாபித்திருக்க வேணுமல்லவா? அதற்கு அவகாசமில்லாமற் போகுமே. ஒரு உதாரன் தனக்குள்ள பொருள்களை யெல்லாம் ஒரு யாசகனுக்கே பூர்த்தியாகக் கொடுத்துவிட்டால் எப்படி? மற்றுள்ள பல யாசகர்களுக்கும் கொடுக்கச் சரக்கு இருக்கவேணுமே; (அது போல) பகவானும் தன் ஸ்வரூபத்தை நிச்சேஷமாக ஒரு வஸ்துவிலேயே நிரப்புகிறானென்றால் இது எப்படி ஸம்பவிக்கும்? மற்ற வஸ்துக்களுக்கு என்ன கதி? ஒவ் வொரு வஸ்துவிலும் நிச்சேஷமாக நிரம்பியுள்ளானென்கை பொருந்தமாட்டாது. ஒன்றில் நிச்சேஷமாக நிரம்பி விட் டால் மற்றொன்றிலிருக்க ப்ரஸக்தியேது? ஆகவே வஸ்து தோறும் பகவத் ஸ்வரூபம் நிச்சேஷமாக நிரம்பியுள்ள தென்று கொள்ளத்தகாது—என்பது மற்றொரு ஆக்ஷேபம்.

இவ்விரண்டு ஆக்ஷேபங்களும் இன்று நேற்று உதித்தவையல்ல; நெடு நாளாகவேயுண்டு. இவற்றை நமது பூருவாசாரியர்கள் நன்கு கண்டித்துள்ளார்கள். ஸ்பஷ்டமாகக் கண்டித்திருப்பவர் ச்ருதப்ரகாசிகாசார்யர். எங்கே எவ்விதமாகக் கண்டித்திருக்கிறாரென்பது பற்றி மேலே மூன்றாமத்யாயத்தில் விவரிப்போம். அது நிற்க.

மேலே விவரித்த இரண்டு ஆக்ஷேபங்களைக் கூசாமல் பேசவல்லவர்கள் யாராயிருக்க வேண்டுமென்பதைச் சிறிது விமர்சிப்போம். பகவானுக்கு ஒப்புயர்வற்ற சக்தி விசேஷமுண்டென்பதைப் பொறுக்ககில்லாதவர்களே இந்தக் கக்ஷிகளைக் கிளப்பவேண்டும். பகவான் அத்புத சக்தியுக்தன் என்றும் அகடித கடநாஸமர்த்தன் என்றும் பிரமாணங்கள் கூறுவதை அஞ்ஜலிபந்தத்துடன் ஏற்கவல்ல ப்ராமாணிக வேதாந்திகள் இப்படிப்பட்ட கக்ஷிகளைக் கிளப்ப ஒருபோதும் நினையார்கள்.

இந்த வ்யாப்தி விஷயத்தை, அல்லது ப்ரதிவஸ்து பூர்ணத்வ விஷயத்தை விட்டிட்டு வேறு சில விஷயங்களை யெடுத்துக்கொள்வோம். ஸகல ப்ரபஞ்சங்களுக்கும் பகவானையே காரணபூதனாகக் கொள்ளுகிறோம். உலகில் ஒவ்வொரு கார்யவஸ்துவுக்கும் மூவகைப்பட்ட காரணங்கள் வேண்டியிருக்கின்றன; 1. உபாதானகாரணம், 2. ஸஹகாரிகாரணம், 3. நிமித்த காரணம். ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியில் இம் மூவகைக்காரணமும் பகவானொருவனே யென்று மறைமுடி அறுதியிடுகின்றது. ஒன்றுக்கே மூவகைக் காரணத்வமும் எங்ஙனே பொருந்தும்? உலகில் இப்படியுள்ள ஒரு வஸ்துவையாவது உவமையாக எடுத்துக்காட்ட முடியுமோ? முடியாதே. உலகிற் காண்கிறபடிதானே பக

வானிடத்தில் ஸமஞ்ஜஸமாகவேணும். ஒருவனே மூவகைக் காரணமுமென்று அஸம்பத்தமாக எப்படிச் சொல்லுகிறீர்கள்? என்று கேட்டால், பகவான் அத்புதசக்தியுக்தனுகையாலே அப் பரம புருஷனிடத்தில் எதுவும் ஸமஞ்ஜஸமே, அஸம்பத்தமானது ஒன்றுமில்லை என்கிற விடைதவிர வேறொன்றும் சொல்லகில்லார் வேதாந்திகள். வேதாந்த தேசிகனும் இதே விடையைத்தான் விடுத்தருளுகிறார்; அச்யுதசதகத்தில் * புரிஸ பஹாண ஸரீரோ * என்றச்லோகத்திற்கு நம்முடைய விரிவான வியாக்கியானம் உலகம் பரவியுள்ளது; வியாக்கியானமே வேண்டா; மூலமே போதும்; * வஹஸி ணிமித்தத்தணம் வி அப்புய ஸத்தீ— வஹஸி நிமித்தத்வமபி அத்புதசக்திः * என்றன்றோ ச்லோகமுள்ளது. அத்புத சக்தியோகத்தாலே இவை கூடும்— என்றன்றோ நிர்வஹிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீபாஷ்யகாராதிகளுக்கும் இந்த அத்புத சக்தியோகமே சாஸ்த்ரார்த்த நிர்வாஹங்களுக்குக் கைகொடுக்கின்றது. ஆகவேதான் “ஸகலவஸ்து விலக்ஷணஸ்ய சாஸ்த்ரைக ஸமதிகம்யஸ்ய அசிந்த்ய-அப்ரமேய-அத்புதசக்தியுக்தஸ்ய பரஸ்ய ப்ரஹ்மணः” என்று அடிக்கடி அருளிச் செய்யப்படுகிறது. மேற்குறித்த வாக்யங்கள் ஸ்ரீபாஷ்ய தீப ஸாராதிகளில் நூற்றுக் கணக்கான இடங்களில் காணலாகும்.

* பரா அஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே * என்பது முதலான சுடர்மிகு சுருதிவாக்கியங்கள் பலபல. இவற்றால் பகவானுடைய சக்தி அத்புதமானதென்று நிரூபிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட சக்தி அவனுக்கில்லை யென்று ப்ராமாணிகரொருவரும் வாய்திறவார். இந்த சக்தியை இசைந்தால் விருத்த ஸமுச்சயங்கொள்ளும்—பேதாபேத

வாதிகளான பாஸ்கராதிகளின் வாதமும் உபபந்நமாக வேண்டிவரும் என்று ஒரு அசட்டுவாதம் கிளம்புகிறது. இதைச் சிறிது விமர்சிப்போம். பேதாபேத வாதிகள் பக வானுடைய அத்புத சக்தியோகத்தை உபஷ்டம்பகமாகக் கொண்டா தங்களுடைய வாதத்தைக் கிளப்பியிருக்கிறார்கள்? இல்லையே. ஆகவே இந்த ப்ரதிபந்தி எப்படி விலைச் செல்லும்? அர்த்த மற்ற இப்படிப்பட்ட ஆபாதனங்களினால் சில அறிவிலிகளை வஞ்சிக்கலாமே யொழிய, விவேகிகளிடம் விலைச் செல்லக்கூடிய வார்த்தையே அன்றிது.

இரண்டாவது அத்யாயம்.

ஒன்று பாருங்கள்; ஸ்வர்க்கத்தை நரக மென்ன மாட்டோம்; நரகத்தை ஸ்வர்க்கமென்ன மாட்டோம்; ஐச்வரியத்தை தாரித்ரியமென்ன மாட்டோம், தாரித்ரியத்தை ஐச்வர்யமென்ன மாட்டோம். த்வேஷத்தை ஸ்நேஹமென்ன மாட்டோம், ஸ்நேஹத்தை த்வேஷமென்ன மாட்டோம்; விஷத்தை அம்ருதமென்ன மாட்டோம், அம்ருதத்தை விஷமென்ன மாட்டோம்; நிழலை வெய்யிலென்ன மாட்டோம், வெய்யிலை நிழலென்ன மாட்டோம். ஆனால் நம்மாழ்வார் திருவாய்மொழியில் சேராதவற்றை யெல்லாம் சேர்த்துச் சொல்லி யேத்துகிறார். * நல்குரவுஞ் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய், வெல்பகையும் நட்பும் விடமுமமுதமுமாய் * கண்ட வின்பம் துன்பம் கலக்கங்களும் தேற்றமுமாய் * நகரமும் நாடுகளும் ஞானமும் மூடமுமாய் * * புண்ணியம் பாவம் புணர்ச்சி பிரிவென்றிவையாய்* என்றிப்படி வாய் வந்தபடி யெல்லாம் பேசியுள்ளார். இப் பதிகத்திற்கு நம் தேசிகன் அத்புதமானச்லோகமிட்டருளு

கிருர்:— * ஸம்பத்தாரித்ர்யபாவாத் .... அகடித கடநம் ப்ராஹ க்ருஷ்ணம் சடாரி: * என்றருளியுள்ளார்.

இங்கே புத்திமான்கள் சால விமர்சிக்க வேண்டியதுண்டு; * நல்குரவுஞ் செல்வுமென்கிற இத்திருவாய்மொழியில் * வன்சரண் சுரர்க்காய் அசுரர்க்கு வெங்கூற்றமுமாய் * என்பதும் (8) ஒரு பாசுரம். பகவான் தைவப்ரக்ருதிகளுக்கு சரண்யனும் ஆஸுரப்ரக்ருதிகளுக்கு ம்ருத்யுவாயுமுளன் என்று இப்பாசுரத்தில் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. உலகில் ஒரு மனிதன் சிலர்க்கு நல்லனும் சிலர்க்குத் தீயனுமிருப்பதை எங்குங்காணுகின்ருேம். இப்படியிருப்பதற்கு ஒரு அகடிதகடநாசக்தி வேண்டிய அவசியமேயில்லை. இதுபோல பகவானும் நல்லார்க்கு நல்லனாய்த் தீயார்க்குத் தீயனுயிருக்கிருனென்பதில் அகடிதத்வமென்பது சிறிதுமில்லை. சிலரிடத்திலே நல்குரவையும் சிலரிடத்திலே செல்வத்தையும் தருகிருன்; சிலர்க்கு நரக ப்ராப்தியையும் சிலர்க்கு ஸ்வர்க்க ப்ராப்தியையும் பண்ணி வைக்கிருன். என்ருல் இதில் அஸம்பாவிதத்வசங்கைக்கு உதயமேயில்லையன்ருே. இத்திருவாய்மொழியை இப்புடையிலே நிர்வஹிப்பதில் என்ன அருமை. ஒன்றுமில்லை. எம்பெருமான் இப்படியாகவுள்ளானென்று சொல்லுவதனுல் அவனுடைய அகடிதகடநாஸாமர்த்தியம் விளங்குகைக்கு ப்ரஸக்தியேது. சேராதவற்றைச் சேர்ப்பிக்கவல்ல சக்தி பகவானுக்குக் கிடையவே கிடையாதென்பவர்கள் இங்கே இரண்டு விஷயங்களுக்கு விடை கூறவேண்டும். (1) * அகடித கடநம் ப்ராஹ க்ருஷ்ணம் சடாரி: * என்று ஸ்வாமி தேசிகன் ஏன் அருளிச் செய்தார்?, (2) இந்தத் திருவாய்

மொழியில் அகடித கடநா சக்தியைக் கொண்டு கூறவேண்டிய விஷயம் என்ன இருக்கிறது?—வர்ஷசதமானாலும் இவ்விரண்டு கேள்விகளுக்கும் ஆர்ஜவத்துடன் விடையிறுக்க பகவச் சக்தி வித்வேஷிகள் அசக்தரே. இப்பதிகத்தினால் ஸர்வநியந்த்ருத்வம் அநுபவிக்கப்பட்டதென்று அருளிய ஆறாயிரப்படியாசிரியரான பிள்ளான் வழியிலே நின்று ச்லோகமிடாமல் நம்பிள்ளை திருவடிகளின் வியாக்கியானங்களை ஸேவித்து அந்த வாஸனையாலே * அகடித கடநம் ப்ராஹ * என்றருளிச் செய்த தேசிகனுடைய திருவாக்கு இவ்விடத்தில் அநுபாதேயமேயென்று பலர் வாயில் கேட்டிருக்கிறோம்; அந்த விடையோ அதற்குப் பர்யாயமான விடையோ தவிர வேறு வெளிவர ப்ரஸக்தியுண்டோ? உண்டெனில் அருளலாமே; அப்போது சாஸ்த்ரார்த்த மருமங்களெல்லாம் தன்னடையே வெளிவந்து தீருமே. ப்ராஸங்கிகமான விது நிற்க.

பகவானுடைய ஸ்வரூபம் ஒவ்வொரு வஸ்துவிலும் நிச்சேஷமாக நிரம்பியுள்ளதென்று கொள்ளுகிறவிதில் என்ன விபத்து வந்திட்டது? பரம கிருபையுடனும் சாந்தியுடனும் விடையிறுக்கவேணும். நாம் கேட்கிற கேள்வியை நன்கு வாங்கிக் கொண்டு விடையருளவேணும். நூற்றெட்டுத் திருப்பதிகளுள்ளன. ஒவ்வொரு திருப்பதியிலுமுள்ள மூர்த்திகளொவ்வொன்றிலும் பகவானுடைய ஸ்வரூபம் நிச்சேஷமாக நிறைந்துள்ளதா இல்லையா என்று கேட்கிறோம்; மற்றவற்றில் பகவத் ஸ்வரூபம் எப்படியாவது இருக்கட்டும். ஆங்காங்கு பக்தர்களால் ஆராதிக்கப்படுகிற திருமூர்த்திகளை யெடுத்துக் கொள்வோம். இவற்றிலும் ஸ்வார்த்தயஜந மூர்த்திகளை விட்டுப் பரார்த்தயஜந மூர்த்திகளை மாத்திரம் கொள்வோம். இவற்றிலும் திவ்ய

தேசங்களில் திகழும் திருமூர்த்திகளையே கொள்வோம். அவ்வளவும் வேண்டா; கோயில் திருமலை பெருமாள் கோயில் என்று சிறப்பித்துக் குலாவப்படுகிற மூன்று திருப்பதிகளிலுள்ள திருமூர்த்திகளையே கொள்வோம். ஸ்ரீரங்கநாதனிடத்தில் [மூலமூர்த்தியில்] பகவத்ஸ்வரூபம் நிச்சேஷமாக நிரம்பியுள்ளதா இல்லையா? என்று கேட்கிறோம். திசைகள் தோறும் மருளமருள விழித்து நில்லாமே தெளிந்து நின்று விடையருளவேணும். ஸ்வாமி தேசிகன் அருளிய அற்புதமான ச்லோகமொன்று * பக்தஸ்ய தாநவசிசோ: பரிபாலநாய * இத்யாதி. இதில் என்ன சொல்லப்படுகிற தென்னில் * எங்குமுளன் கண்ணனென்ற மகனைக் காய்ந்த இரணியன் தூணைப் புடைப்பதற்கு முன்னே எம்பெருமான் மூவுலகத்திலும் ஒவ்வொரு வஸ்துவிலும் [ஒவ்வோரிடத்திலும்] நாஸிம்ஹரூபியாக ஆவேசித்து விட்டதாகவும், இரணியன் தட்டினது ஒரு தூணையேயாதலால் அந்தவொருதூணில் நின்று மாத்திரம் ஒரு நாஸிம்ஹமூர்த்திமாத்திரமே வெளிவந்தபடியால் மற்ற ஸகல ப்ரதேசங்களிலும் ஆவேசித்த பல கோடி நூறாயிரம் நரஸிம்ஹமூர்த்திகள் இன்னமும் அப்படியே [illegible]வாஸஞ் செய்வதாகவும் ஸாதிக்கப்பட்டிருக்கிறது. இதை அதிவாத மென்று சொல்லிவிட்டால் ஸ்வாமிக்கு அஸாதாரணமாகவுள்ள ஏற்றம் போய்விடும். "ஆளவந்தார், பாஷ்யகாரர் முதலானோருங்கூட அதிவாதிகளே; நம் தேசிகனொருவரே அதிவாத[illegible]வைதேசிகர்" என்று சாற்றிய பறை இன்றாக அவத்ய மடையலாகாது. ஏற்கெனவே ஆவிர்ப்பவித்த நரஸிம்ஹ மூர்த்திக்கும், [illegible] கர்ப்பவாஸம் பண்ணுகிற நரஸிம்ஹ மூர்த்திகளுக்கும் வாசியுண்டோ? என்பதையும் சேர்த்துக் கொண்டு விடை

யிறுக்கவேணும். [illegible]. [illegible]. ஒரு ஸ்ரீரங்கநாதனிடத்திலேயே பகவத் ஸ்வரூப மடங்கலும் அடங்கி விட்டால் மற்றும் திருமலை பெருமாள் கோயிலிலுள்ள மூர்த்திகளிலும் வியாபிப்பதற்கு ஸ்வரூபமில்லாமையாலே ஸ்ரீரங்கநாத மூர்த்தியில் பகவத் ஸ்வரூபத்தின் ஸ்வல்ப பாகந்தான் உள்ளதென்று உரைக்க வேணும். எந்தத் திருமூர்த்தியைப்பற்றிக் கேட்டாலும் இப்படியே தான் விடையிறுக்க வேண்டிய தலைவிதியாயிற்று பகவத் சக்திவித்வேஷிகளுக்கு. பகவத் ஸ்வரூபப் அரை குறையாக இருக்கப் பெற்ற மூர்த்திகளையே இவர்கள் தொழுதுவருவதாகத் தேறிநின்றது.

ஸ்வரூபம் ஆங்காங்கு அரை குறையாக இருந்தாலும் ஒவ்வோரிடத்திலும் பரிபூர்ணசக்திக்கு அணுமாத்திரமும் குறையே கிடையாதென்று நாங்கள் இசைகிறோமே யென்று இவர்கள் சொல்லக் கூடும். இது அர்த்தமில்லாத வார்த்தை வ்யாப்தனுக்கு ப்ரதிவஸ்து பூர்ணத்வத்தைச் சொல்லுகிற வைதிகர்கள் யாவர்க்கும் ஒரே விதமான அபிப்ராயமே உள்ளது; அதாவது ஒரொரு உபாத்யவச்சிந்ந ப்ரதேசமே ஸர்வத்தையும நிர்வஹிக்கவல்ல சக்தியுடைத்தாயிருக்கை யென்பதே. நிரூபகர்கள் இவ்வளவு மாத்திரமே யெழுதி விட்டு நின்றால் வெகு அழகாக இருந்திருக்கும். ந்யாயஸித்தாஞ்ஜந ஸ்ரீ ஸூக்தியோடும் மிக விணங்கியிருக்கும். ஒருவர்க்கும் ஒன்று சொல்ல வாயெழாது. "வஸ்து தோறும் ஸ்வரூப ஸமாப்தியென்று கொண்டால் மற்றோரிடத்தில் வியாபிப்பதற்கு வஸ்து வில்லையாகும்" என்று தூஷணம் கொடுப்பதுண்டே. இதுதான் வெகு ஆச்சரியம். "வ்யாப்தனுக்கு ப்ரதி

வஸ்து பூர்ணத்வமாவது வஸ்து தோறும் ஸ்வரூபஸமாப்தி தான்; அதாவது ஓரொரு உபாத்யவச்சிந்ந ப்ரதேசமே ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல சக்தியுடைத்தாயிருக்கை" என்று எழுதிவைத்தால் எவ்வளவு அழகாயிருந்திருக்கும். ந்யாயஸித்தாஞ்ஜந ஸ்ரீஸூக்தியோடு விரோதம் விளையாமலிருப்பது முதல் லாபமாகுமே.

மூன்றும் அத்யாயம்

ந்யாயஸித்தாஞ்ஜநத்திலும் வஸ்து தோறும் பரிஸமாப்தியை இசையவேயில்லை- என்கிற மருளை அறவேவிட்டொழிக்கவேண்டும். அந்த திவ்யக்ரந்தத்தில் * அ சவூஜஷூஅ ஜஅதிஷூ வஙிவஅணஆவணவெஸூ:......வணவஜெவ வஙவஆ தூாவி வஅணஆவணவ" என்றருளிச் செய்துவிட்டு உடனே "கூநஃதூ விதுஸா நவூ கூநஃதூ வஅணஆகூ நவூாஜி திஜெகூ" என்கிற ஸ்ரீ ஸூக்தியுள்ளது. இந்த ஸூக்திக்கு உதீதி எப்படி? என்பதொன்றையே விவேகிகள் விமர்சிக்கவேணும். * உதிஜெகூ என்ற இந்த ஆஶங்கைக்கு ஸமாதானம் எதுவாயினுமாகுக. அதைப்பற்றி விசாரமே யில்லை. * ஸர்வத்ராபி பூர்ண ஏவ * என்று ஸாதித்தவுடனே "வேறிடங்களிலுமிருக்கின்ற ஈச்வரன் ஒரே யிடத்தில் எப்படி பூர்ணனாயிருக்கமுடியும்? என்று ஒருவன் ஆக்ஷேபிப்பதாக எழுதப்பட்டிருக்கிறதே, கீழ் வாக்யத்திலிருந்து தானே இந்த ஆக்ஷேபம் தோன்ற வேண்டும். இப்படி ஆக்ஷேபிக்கவேண்டும்படியான விஷயமே கீழ்வாக்யத்தில் சொல்லி முடிக்கப்பட்டிருக்கிறதென்பது கைகொள்கனியாகக் காண்கிறதே.

சாகுந்தல நாடகத்தின் முடிவில் மஹாகவி ஒரு வாக் விநோதம் காட்டியுள்ளார்; அதைச் சுருக்கமாக நினைப்

பூட்டுகிறேம்; குழந்தையான துஷ்யந்தகுமாரனெதிரில் ஒருத்தி ஒரு பதுமைப் பறவையைக் கொண்டுகாட்டி "ஸர்வதமந! சகுந்தலாவண்யம் பச்ய" [குழந்தாய்! இந்த பக்ஷியின் அழகைப்பார்] என்று சொன்ன வளவிலே, 'அப்படியா? என் தாயான சகுந்தலேயா? எங்கே?' என்ற தாம் அக்குழந்தை. சகுந்தமென்று பக்ஷிக்குப் பெயரா கையாலே 'சகுந்தத்தினுடைய லாவண்யத்தைப் பார்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. குழந்தையானது (சகுந்த) என்றும் (லாவண்யம்) என்றும் கொள்ளாமல் (சகுந்தலா...) என்று தன் தாயின் பெயரை ப்ரஸ்தாவித்த தாகக் கொண்டு சகுந்தலே எங்கே? என்று கேட்டதாக அமைப்பு உள்ளது. இங்கு 'சகுந்தலாவண்யம்' என்று சொல்லாமல் "விஹங்கம லாவண்யம்" என்றே 'பக்ஷிலா வண்யம்' என்றே சொல்லியிருந்தால் அப்போது குழந்தை என் தாய் எங்கே?' என்று கேட்பதற்கு ப்ரஸக்தி, யுண்டோ? இது கவிதானுகை வைத்த வொரு சமத்காரம் அப்படி ஏதேனும் இங்கு விசித்ரவாக்கின் அமைப்பு உள் ளதோ? ருஜுவான வாக்கேயுள்ளது. "ஸர்வத்ராபி பூர்ண ஏவ" என்று ஸாதித்த ஸ்வாமியின் திருவுள்ளத்தில் 'சந்த்ரவிச்வாநஸ்ய சந்த்ரஸ்ய பூர்ணத்வம் கதம் ஸம்பவேத்' என்று சங்கிப்பதற்கு உறுப்பான அர்த்தமே உறைந்துகிடந்ததென்பது அசைக்க முடியாதபடி தேறி விட்டது. அந்த பூர்ணத்வந்தான் வஸ்து தோறும் ஸ்வ ரூப ஸமாப்தி யென்பது. கடைசியாக இவ்விஷயத்தை முடிக்குமளவிலும் வேறொரு சப்தத்தையிட்டு முடிக்காமல் "யதாஸம் ஸ்வஸ்ய பூர்ணத்வஸ்ய ஸம்பவாத்" என்று முதல் முதலிலெடுத்த பூர்ண சப்தத்தையே யிட்டு முடித் தார். இவ்விடத்தில் *க்ருத்ஸ்நவ்யஸ்தநிதர்சநாதி பூர்வ பக்ஷ

ஸூத்ரத்தையும் * ஶ்ருதேஸ்து ஶப்தமூலத்வாத்* என்கிற ஸித்தாந்த ஸூத்ரத்தையும் எடுத்துக் காட்டி இதைத் தஞ்சமாகக் கொண்டன்றோ விவாத விஷயம் உபஸம்ஹரிக்கப் பட்டது. பிறர் சொல்லுகிறபடி ஸ்வாமிக்குத் திருவுள்ளமாயிருந்தால் இங்கு இந்த ஸூத்ர-உதாஹரணம் ஸர்வாத்மநா அப்ரஸக்தமாகுமே. லோக விஸஜாதீயமான அத்புத சக்திவாய்ந்த பரம புருஷனிடத்திலே 'இது எப்படி ஸம்பவிக்கும்? அது எப்படி ஸம்பவிக்கும்?' என்று வாயைத் திறவாதே என்றன்றோ ஸூத்ரகாரர் முடித்திட்டது. அது தானே இங்கு ஸ்வாமியின் முடிவுக்குக் கை கொடுத்தது. அகடிதகடநாஸமர்த்தன் பக்கலிலே கூடாததொன்றில்லையென்று கூறிவைத்தவர் தாமே ஸ்ரீ ஸாரசாஸ்த்ரத்தில் இந்த ஶக்திக்குக் கண்ணழிவு கூற நேர்ந்ததென்றால், இந்தப் பொற்றலையடைக்க மூவுலகும் திரண்டாலும் செய்யலாவதில்லையே. கைதேர்ந்த ஆயிரம் மருத்துவர்கள் ஒன்று கூடித் திரண்டுருண்டு வந்தாலும் உயிரிழந்து போனவற்கு உயிர்ப்பிச்சை யளிக்க முடியுமாவென்பதையும் உணரகில்லாரந்தோ இம்மஹாமேதாவிகள்.

* மலிநமபி ஹிமாம்சோர் லக்ஷ்ம லக்ஷ்மீம் தநோதி * என்ற மஹாகவி தானே *ஏகோ ஹி தோஷோ குணஸந்நிபாதே நிமஜ்ஜதி இந்தோ: கிரணேஷ்விவாங்க: * என்றது என்னே? *லக்ஷ்மீம் தநோதிக்குப்* நிமஜ்ஜதிக்கும் சேர்த்தியில்லையே யென்று கேட்டால் இதற்கு ஒருபடி மறுமாற்றமுரைத்து மெழுகலாம். இங்கு அப்படியில்லையே.

ச்ருதப்ரகாசிகாசார்யர் தெளிவித்த தெளிவை இனி விளக்குவோம். உபநிஷத்து * யஜூகதிதிஷ்ணு * என்ற

வளவோடு நில்லாமல் * ஸூக்ஷ்ம: ஸூக்ஷ்ம: * என்றும் ஓதிற்று. இது அவசியமோ? * ஆத்மநி திஷ்டந் * என்ற வளவே போராதோ? என்று சங்கை தோன்றக் கூடியது. இதற்கு ஜிஜ்ஞாஸாதிகரண ச்ருதப்ரகாசிகையில் * வேத்யாம் அக்நிஸ் திஷ்டதி * திலே தைலம் திஷ்டதி * என்ற இரண்டு வாக்கியங்களை யெடுத்துக் காட்டித் தெளிவு பெறுத்தி யிருப்பது பிறர்க்கு நிலமன்றே. ‘எள்ளில் எண்ணெய் இருக்கிறது’ என்றால் எண்ணெயானது எள்ளினுள்ளே யிருப்பது சொல்லிற்றாகுமே யல்லது வெளியிலுமிருப்ப தாகச் சொல்லிற்றாகாது. ‘திண்ணையில் தீ இருக்கிறது’ என்றால் தீ திண்ணையின் மேலிருப்பது சொல்லிற்றாகுமே யல்லது உள்ளிலுமிருப்பதாகச் சொல்லிற்றாகாது. ஆத்மநி பரமாத்மந: ஸ்திதியோ வென்னில் உள்ளும் புறம்பு மொக்கவாயிற்று; திலத்தில் தைலமிருப்பது போலவும் வ்யாப்தி; வேதியில் அக்நியிருப்பது போலவும் வ்யாப்தி; இப்படிப்பட்ட விலக்ஷண வ்யாப்தியை விளங்கக் காட்டு வதற்கே ச்ருதி * ஆத்மநி திஷ்டந், ஆத்மந: அந்தர: * என்று இரண்டு படியாகவும் ஓதிற்று—என்று ச்ருதப்ரகாசிகை யில் விவரணமுள்ளது. “இப்படியிருந்தாலும் இதற்குத் தாத்பர்யம் என்ன தெரியுமா?” என்று தொடங்கிச் சிலர் சொல்லக் கூடியதை நாம் செவியேற்ககில்லோம். அணு வஸ்துவில் அந்தர் வ்யாப்தி விஷயம் நிஷ்கல்மஷமாய் முடிவு பெற்றது.

நான்காமத்யாயம்.

இனி, பரிஸமாப்ய வர்த்தித்வத்தைப்பற்றி ச்ருத ப்ரகாசிகாசார்யருடைய திருவுள்ளமும் எமது நூல்களில்

பலகால் நிரூபிக்கப் பட்டுள்ளது. அதற்கு இதுகாறும் விடைகூறினரொருவருமில்லை. இங்கு அதனைச் சுருங்க உபபாதிக்கிறோம். இதற்கு அவதாரிகையாகச் சில வார்த்தைகள் அவசியமாகின்றன. அத்புதசக்தி யென்னுமிந்த நூல் ஸ்ரீமத் திருவரங்கம் திருமலைதாதாசார்யருடைய ஸர்வசக்திச் சுவடியின் மருளை மாய்க்கவே தோன்றுகிற தென்பது அபலபிக்க வொண்ணாத விஷயம். அந்தச் சுவடியில், ஜயந்தபட்டன்—பார்த்தஸாரதி மிச்ரர்—சாலிக நாதன் என்கிற பெயர்களை மகுடமாக வைத்துச் சில சில வரிகள் வரையப்பட்டுள்ளன. இந்த பரிச்ரமம் எதற்காகக் கொள்ளப்பட்ட தென்பதைச் சிறிது விவரிக்கிறோம். இது மிக முக்யமான விஷயம். "ஜாதி வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமா போலே எல்லாவற்றிலும் தனித்தனியே குறைவற வியாபித்து நிற்கும்" என்றும், "ஜாதி வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்கிற தென்றால் அசேதநத்துக்கு அது கூடு மென்றிருப்பர்கள்; பரமசேதநனாய் ஸர்வ சக்தியானவன் இங்ஙனே வர்த்திக்கிறானென்றால் இதில் விப்ரதிபத்தி பண்ணிப் போருவர்கள்" என்றும் ஈட்டில் அருளிச் செய்தவற்றை நாம் எடுத்துக்காட்ட நேர்ந்த போது இவரைப் போன்றவர்கள் "நாம் ஜாதியை ஒப்புக் கொள்ளாதவர்க ளாகையாலே ஜாதியை த்ருஷ்டாந்தீகரித்து இவ்விஷயத்தைச் சொல்லுவதே தகுதியற்றது" என்றார்கள். அதன்மேல் நாம் "யதா ஜாதிவாதிநோ ஜாதிரேகைவ ஸ்வாஶ்ரயபூதாஸ்வநாதிஷு ஸத்யஸ்வபி க்ஷணேஷு ஸந்நேஷ்வபி பரிஸமாப்யைவ வர்த்ததே ததா ஜீவாஸ்ரயேஷ்வாத்மேதி" என்றுள்ள வேதாந்த தீபஸூக்தியை யெடுத்துக் காட்டினோம். அதன் பிறகு திகைத்து நின்றவர்களிவர்கள். இந்த ஸ்ரீ ஸூக்தியானது

இவர்களுடைய குசோத்யங்களை யெல்லாம் வேறுக்கு மது. இருக்கட்டும். இப்போது இவர் (பக்கம் 13-ல்) இந்த ஸ்ரீ ஸூக்தியைப் பரம கம்பீரமாக உதாஹரிக்கிறார். "பகவத் ராமாநுஜன் தீபக்ரந்தத்தில் ஸ்பஷ்டமாக ஸாதித்தார்" என்று உதட்டின்கீழ்த் தேனொழுக எழுதுகிறார். வர்ஷ ஸஹஸ்ரம் போராடினாலும் இந்த ஸ்ரீ ஸூக்தி இவர்களுக்கு கண்ணைம்பை-வென்பது அசைக்கமுடியாதது. சோத்யம் பண்ண வாயைத் திறவாதே என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கச் செய்தேயும் "ஒரு வ்யக்தியினுள்ளே பரிஸமாப்ய வர்த்தித்தால் அந்யத்ர வ்யாப்தி எப்படி கூடும்." என்று இந்த ஆக்ஷேபமொன்று தானே இவர்களிடம் அவத்யமாய் நிற்கிறது. [அவத்யமாய் என்றது பிசகு; அணிகலனாய் என்க.] இந்த ஆக்ஷேபத்தைச் செய்யாமல் அர்த்த பரிஷ்காரத்தை எங்ஙனே செய்தாலும் அழகியதே யென்று நாமும் பல பல கால் அறைகின்றோம். தைவதுர்விபாகாத் இந்த ஆக்ஷேபத்தை மறைத்திட முடியவில்லை யிவர்களுக்கு. எதைச் சொல்லி உய்வோமென்று தடுமாறுகின்றார்கள். ஜாதியைப் பற்றிப் பிறர் என்ன சொல்லுகிறார்களென்று பார்க்கிறார்கள். எதைப்பார்த்தாலும் இவர்களுக்கு அநர்த்தமாகவேயுள்ளது. அதையும் தாங்களே வெளியிட்டுக் கொள்ளுகிறார்களே, இதுவும் ஒரு விசித்திரம். ஜயந்த பட்டன் என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ள விஷயம் இவர்களுக்கு என்ன உபகாரகமோ அறியோம். "ஜாதியைப் பரிஸமாப்யவர்த்தியென்கிறீரே, ஒரு வ்யக்தியிலேயே முடிந்து நிற்பதையன்றோ பரிஸமாப்யவர்த்தி யென்பது; மற்றும் பலபல வ்யக்திகளிலு மிருக்கிறவிதனை ஒரு வ்யக்தியில் பரிஸமாப்யவர்த்தி

யாக எப்படிச் சொல்லுகிறீர்?" என்று கேட்பவர்களுக்கு ஜயந்த பட்டாசார் என்ன மறு மொழி கூறுகின்றார்? அவர் சொல்லுவதிவ்வளவே; 'என்னைக் கேட்டால் நானென்ன சொல்வது? பரிஸமாப்யவர்த்தி யென்று சொல்லித் தீரவேண்டியதாயிருக்கிறது; அது மற்ற வ்யக்திகளிலும் காணப்படுகிறதே யென்கிறாயோ ஆமாம், காணப்படுகிறது. அதை இல்லை செய்ய யாரால் முடியும்? அதையும் இசைய வேண்டியதே, இதையும் இசைய வேண்டியதே' என்று.

இவ்விதமாகவே—இதைவிட அதிகமாகவே பகவான் விஷயத்தில் பேசவேண்டியிருக்க, இவர்கள் என்ன பேசுகிறார்களென்பதை விவேகிகள் நோக்கவேண்டுமே. ப்ரஹ்ம ஸ்வரூபம் ஒன்றில் பரிஸமாப்யவர்த்தித்தால் மற்றொன்றில் அது காணமுடியாதென்றே இன்னமுங் கூறுகிற இவர்களின் பிடிவாதம் ஊமனார் கண்ட கனவிலும் பழுதாயொழிந்ததென்று முடியவில்லையா? பகவானை ஸ்பர்சியாத அவர்களின் பேச்சு ஒரு புறமிருக்க, ப்ரஹ்மவாதிகளில் தலைவரான ச்ருத ப்ரகாசிகாசார்யருடைய ஸ்ரீ ஸூக்தியன்றோ நமக்குத்தலைமேலது. வேதார்த்த ஸங்க்ரஹ விவரணத்தில் "ஏகஸ்மிந்நேவ வஸ்துநி ஸ்வரூபஸ்ய பூர்ணவ்ருத்திதயா அந்யத்ர வ்ருத்த்யயோக்யத்வ ஸங்காவஸ்தாவகாச:" என்றுள்ள ஸ்ரீ ஸூக்தியானது இவர்கள் கூறும் அல்பமான ஆக்ஷேபத்தைப் பல யோஜனை தூரத்தளவில் கொண்டு தள்ளவில்லையா? "ஏகஸ்மிந்நேவ வஸ்துநி ஸ்வரூபஸ்ய பூர்ணவ்ருத்திதயா" என்ற வாக்யமானது பரப்ரஹ்ம ஸ்வரூபம் வஸ்து தோறும் பூர்ணவ்ருத்தி யென்று திடப்படுத்திற்று. அடுத்ததான * அந்யத்ர வ்ருததி-

அயோக்யத்வசங்கா வ்யுதாஸ * என்றதானது பஹிர்வ்யா ப்திக்கு விருத்தமாமென்று வாயெடுக்கவுமாகா தென்று கெட்டியான பூட்டுபோட்டு விட்டது. இந்த மருமம் இவர்களது நெஞ்சிற்படாமலில்லை; பட்டும் பயனில்லையே. 'சட்டி சுட்டது, கைவிட்டது' என்று விட்டுத் தொலைக்க விதியில்லையே. "இந்த ஸூக்திக்கு அது திருவுள்ளம், அந்த ஸூக்திக்கு இது திருவுள்ளம்" என்று தம் மனத்துக்கும் பொருள் படாதவகையில் மெழுகிக் கொண்டு போவதனால் கைசலித்து நிற்பாரில்லை கிடீர். உபநிஷத் பாஷ்ய காரரான ரங்கராமாநுஜ ஸ்வாமியின் ஸ்ரீஸூக்தியை நாமெடுத்துக் காட்டினோம்; அதையேயிவரும் காண்க வென்கிறார்.

கலியாண முஹூர்த்தத்திற்கு நாளிட்டுத் தரும்படி ஒரு யதாஜாதன் ஒரு புரோஹிதரிடம் வேண்டிக் கொண்டான்; அவர் ஏதோவொரு பஞ்சாங்கத்தைத் தவறாகப் பார்த்து 'பங்குனிமீ 14உ நல்ல நாள்' என்று தெரிவித்தார். அந்த யதாஜாதன் அப்படியே குறிப்பிட்டு உற்றாருறவினர்க்கு சுப பத்திரிகை அனுப்பிவிட்டான். ஒருவர் கவனித்துப் பார்த்ததில் அந்நாள் க்ருத்திகையும் அமாவாஸ்யையும் சனிக்கிழமையும் மரணயோகமுங் கூடியிருந்தது. உடனே ஓடிவந்து 'இதென்ன, இப்படி விபரீதமான நாளை யார் உமக்கு இட்டுக் கொடுத்தது?' என்று கேட்க, அவன் உண்மையில் திதிவாரநக்ஷத்ர நன்மை தீமைகள் ஒன்றுமறியாதவனாகையாலே புரோஹிதரிடம் வந்து 'தாங்களிட்டுக் கொடுத்த நாள் நல்லதன்று' என்கிறார்களே யென்றான். உடனே புரோஹிதர் பஞ்சாங்கமெடுத்துப் பார்த்தவாறே முன்பு தாம் பார்த்தது வேறொரு

வருஷத்தியதென்றும் அநவதாநாத் தவறிப்போய் விட்டதென்றும் உண்மைதெரிந்து கொண்டார்; ஆனாலும் தமது அசட்டுத்தனத்தை ஒப்புக்கொள்ள மனமில்லாமல் ஒரு சூது செய்யத் தொடங்கினர்; "நல்லநாளன்று என்று உன்னிடம் சொன்னவரை இங்கு அழைத்துவா; நான் எது கேட்டாலும் அவர் ஆமாம் ஆமாம் என்றே ஒப்புக் கொள்ளும்படி செய்துவிடுகிறேன் பார்" என்று சொல்லிப் போகவிட்டார். உடனே அவரையழைத்துக் கொண்டு வந்தானவன். அவரை நோக்கிப் புரோஹிதர் கேட்கிறார்;—(வினா) பங்குனிமீ 14வ அமாவாஸ்யை தானே. (விடை) ஆமாம். (வினா) அன்று கிருத்திகை தானே. (விடை) ஆமாம்; (வினா) அன்று சனிக்கிழமை தானே. (விடை) ஆமாம். (வினா) அன்று மரணயோகந் தானே. (விடை) ஆமாம். (வினா) நான் கேட்டால் எதையும் ஆமாம் ஆமாம் என்கிறீர்; இவனிடம்போய் (அல்ல அல்ல) என்கிறீராமே, ஏன்?

இதற்குமேல் அவர்க்கு ஒன்றும் பதில் சொல்லத் தோன்றவில்லை. நம்மால் இவர்க்கு பதில் சொல்லிப் பிழைக்க முடியாதென்றும் சிக்கன வெண்ணி ஒன்றும் சொல்லாமல் போய்விட்டாரென்று ஸ்ரீமத்தோழுந்துராண்டவன் ஒரு கதை ஸாதிப்பது கேட்டதுண்டு. அது தான் இங்கு ஞாபகத்திற்கு வருகிறது. "உங்களுக்குக் கால கூட.மான பிரமாணங்காணுமிது" என்று நாம் எந்த ப்ரமாணங்களைக் காட்டுகிறோமோ அவற்றைப் பற்றி இவர்கள் ஆராய்ந்து விவரிக்கவேண்டியிருக்க அதைவிட்டு அதை தங்களுக்கு அநுகூலம் போலவே பாவனை காட்டி "அவற்றைக்காண்க" "அதைக் கவனிக்கவேண்டியது"

"அதை உற்று நோக்க வேண்டியது" என்று எழுதிவிட்டால் என்னகும்! விவரித்த கதையில் புரோஹிதருடைய ஸ்தானத்தையே இவர்கள் ஆச்சரியமாக அலங்கரிப்பவர்களென்பதை எளிதாகக் கண்டறியவல்ல விவேகிகள் ஆங்காங்கு இல்லாமற் போகவில்லை.

இவர்களுடைய மற்ருெரு சாதுர்ய வழியும் காண்மின்; இந்த வ்யாப்தி விஷயத்தில் ப்ரஹ்மவ்யாப்திபரிஷ்க்ரியா என்கிற ஸம்ஸ்க்ருத நூலை நாம் வெளியிட்டுப் பத்து வருஷமாகிறது. அது யாரை நோக்கி வெளியிடப்பட்டது? அதற்கு யார் பதிலுரைக்கவேண்டியவர்? என்பதை வித்வான்கள் மறந்திருக்கமாட்டார்கள். ஆனல் அந்த மஹான் உண்மை தெளிந்து வாளாவிருக்கின்ருர். அவருக்குப் பிரதிநிதிகளாகப் பலர் எழுதப் புறப்பட்டார்கள். ஒவ்வொருவர்க்கும் நாம் உடனுக்குடனே உத்தர முரைத்தே வருகிருேம். அவரவர்கள் மறுபடியும் தாங்கள் வாய்திறவாமல் வேருெருவரை யெழுப்பி ஏவுகிருர்கள். இந்த ஹஸ்லாவழியில் இவர் இப்போது பாத்ரப்ரவேசமாயினர். அடுத்தபடி வேருெருவர் தலைகாட்டுவர். இதுவே இவர்களுடைய போது போக்காயிற்று. ஆகுக. இவர்களிடமுள்ள ஆர்ஜவம் இத்தகைத் தென்று மத்யஸ்தர்கள் உணர்வார்கள். இவரோடு கூடத் தாளம் போடுவதற்கு ஸ்ரீமத் மதுராந்தகம் வீரராகவாசாரியரொருவர் ஸஜ்ஜராயிருக்கிருர். அவருடைய மேதா விலாஸங்கள் துவரைப்பிரான் திருவருளில் விசதம். அதற்கு ஓர் அக்ஷரமேனும் விடையுண்டோ? அது நிற்க, இவ்விருவருடையவும் லிகிதங்கள் யாவும் இருள் துயக்கு மயக்கு மருளே வடிவெடுத்தவை யென்பதை நாம் சோம்பாது விவரித்தே தீருவோம்.

ஐந்தாம் அத்யாயம்

ஸர்வசக்திச் சுவடியில் தர்க்கம் என மகுடமிட்டு எழுதப்பட்டுள்ள விஷயம் ஸர்வாத்மநா அஸாதுவென்பது ஈண்டு நிரூபிக்கப்படுகிறது. தர்க்கமாவது யுக்திவாதம். சாஸ்த்ரங்களில் தேறின அர்த்தங்களை யுக்திவாதங்களாலும் ஸ்தாபிப்பது என்றொரு முறையுண்டு. * ஆர்ஷம் தர்மோபதேசஞ் சவேதசாஸ்த்ராவிரோதிநா, யஸ் தர்க்கேணுநுஸந்தத்தே ஸ தர்மம் வேத நேதர: * என்பது ப்ரஸித்தமாதலால் சாஸ்த்ரங்களோடு முரண்படாத யுக்தி வாதங்களைக் கொண்டு சாஸ்த்ரார்த்தங்களை நிஷ்கர்ஷிப்பதென்பது நிரவத்யமானது. யுக்தி வாதங்களால் சாஸ்த்ரார்த்தங்களைத் தலை கீழாக்குவதென்பது கிடையாது. ப்ரக்ருத விஷயத்தில் தர்க்கத்தை உபஷ்டம்பகமாகக் கொள்ள வேணுமானுல் "பகவான் ப்ரதிவஸ்து பூர்ணன்" என்பதற்கு ஸாதகமான வழியில் கொண்டு அதை ஸ்தாபிக்கலாமேயல்லது வேறுசெய்யத்தகாது. பிறர் செய்வது என்னவென்றுல், ப்ரதிவஸ்து பூர்ணத்வத்தை அபலாபம் செய்வதற்கு யுக்திவாதத்தை உபஷ்டம்பகமாகக் கொள்ளப் பார்க்கிருர்கள். இவர்களுடைய யுக்திவாதம் எதுவென்றுல், "ஒரு வஸ்துவிலேயே பகவான் பூர்ணன் என்று கொண்டால் மற்றொரு வஸ்துவில் வியாபிக்க ப்ரஸக்தியில்லையே" என்பதுதான். வேறு ஒரு சரக்கும் இவர்கள் கையில் கிடையாதென்பது சிலாலிகிதம். இந்த யுக்தி வாதத்தைக்கொண்டு பகவச்சக்தியை இல்லை செய்வதானுல், இதுபோன்றனவும் இதைவிட மேம்பட்டனவுமான யுக்திவாதங்களினுல் எல்லா சாஸ்த்ரார்த்தங்களையும் எளிதாக நிரஸித்துவிடலாமே. பகவானொருவனுளன்

என்று வைத்துக்கொண்டன்றோ நாம் இங்ஙனே வ்யாப்தி யென்றும் வாத்ஸல்யமென்றும் தயையென்றும் ப்ரபத்தி யென்றும் சிலவிஷயங்களைப் பற்றிக்கொண்டு போராடு கின்றோம். 'மூலே குடார:' என்று அந்தபகவானையே இல்லை செய்கிற யுக்திவாதிகள் இவ்வுலகில் மலிந்து கிடக்கிறார் களே; அவர்களது வாதங்களினால் பகவான் போய்விட் டானென்று நாம் நினைக்கிறோம். *யத்ரு த்ரயஸ்த்ரிம்ஶத் யாஹி ஸம்ரக்ஷதா* என்னும்படி வேதமாதுக்குத் தாலி கட்டிவைத்த மஹாசார்யர் "உத்ஸ்ருஷ்ட நிஷித்த க்ருத க்ஷுத்ரயஜ்ஞ: ஸர்வஹவம் ஶ்ருதிவிதா விஶ்வரூத க்ருஷ்ண" என்று அருளிச்செய்து வைக்கையாலே நாம் குறைவின்றி வாழ்கின்றோம். இங்குக் கழிக்கப்பட்ட அநிஷ்டித குதர்க்க வாதிகள் ஸ்ரீ பாஷ்யாதிகளால் நிரஸ்த ரானவர்கள் மாத்திரமல்ல, ஸ்ரீ வசநபூஷணாதிகளால் நிரஸ் தரானவர்களும் கூட அந்தவிருது சுமப்பவர்களேயென்று அறியத்தக்கது. நையாயிகர்கள் ஈச்வரனை அங்கீகரியா நின்றார்களெனினும் அவர்கள் அநுமானத்தைக்கொண்டு ஈச்வரனை ஸாதிக்கிறபடியால் அந்த ஆநுமாநிகேச்வரனும் பரம வைதிகர்களுக்கு ஹேயனாயினன். எந்தப்ரமாணங் கொண்டு ஸாதித்தாலென்ன? ஏதோவொருபடி ஈச்வரனை அங்கீகரித்தால் போதுமானதுதானேயென்று வைதிகர் கள் நினைப்பதில்லை. ஏன்? *தர்க்காப்ரதிஷ்டாநாத்*

தர்க்கத்திற்கு வைதிகர்கள் எவ்வளவு மதிப்புக் கொடுத்திருக்கிறார்களென்பதை அறியகில்லாத ஸர்வசக் திச்சுவடி (பக்கம் 8-ல்) "ஈச்வரன் ஸ்வதந்த்ரனாகையாலே" என்று தொடங்கி "இதையுமிங்கே ஆலோசிக்கவேணும்" என்றளவாக எழுதியுள்ளவத்தனையும் விபரீதக்ரஹண

வைஜயந்தியே. தென்னாசார்ய ஸம்ப்ரதாய மென்னும் க்ரந் தத்தில் (பக்கம் 61-ல்) நாம் எழுதியிருந்தவற்றைப்பார்த்து விட்டு அதன் மருமத்தைச் சிறிதுமுணராமல் அவ்விஷயத் தை அப்படியே கொள்ளைகொண்டு அஸ்தாநே நிரப்பிவிட் டதே. முக்தனுக்குப் புநராவ்ருத்தியில்லாமையை ஸூத் ரகாரர் சாஸ்த்ரங்கொண்டு நிரூபித்தாரென்றும், அதனல் சங்காபரிஹாரம் செய்யப்படவேயில்லை யென்றும், நமது பாஷ்யகாரர் இங்கு யுக்திவாதங்கொண்டே பரிஹாரங் காட்டினரென்றும் இப்படி மனம்போனபடியெல்லா மெழுதியிருப்பதானது குருகுலவாஸமில்லாத பாவமன் றோ. * ஸூத்ராக்ஷராணி வ்யாக்க்யாஸ்யந்தே * என்று ப்ரதிஜ்ஞை பண்ணின நமது பாஷ்யகாரர்க்கு இது பெருத்த தூஷணமேயல்லது பூஷணமல்ல. இதை இங்குத்தெளி வாக விளக்குவோம்; இங்கு சாஸ்த்ரப்ரதர்சநம் தவிர யுக்தி ப்ரதர்சநமென்பது அணுவளவும் கிடையாது. சாஸ்த்ரத் தினல் த்ருப்தியடையக்கூடிய அதிகாரியை நோக்கியே இந்த மீமாம்ஸா சாஸ்த்ரம் அவதரித்தது. ஸூத்ரகாரர் காட்டின சாஸ்த்ரத்தினல் சங்காபரிஹாரம் ஆகவில்லை யென்றால் அதோகதிதவிர வேறில்லைகிடீர். இங்கு (நஅ) என்று தொடங்கி நம்மிராமாநுசன் காட்டினதும் சாஸ்த் ரமே தவிர தர்க்கமன்று. முக்தனுக்கு கர்மபந்தங்களெல் லாம் விலகிப்போயினவென்பது சாஸ்த்ரைக வேத்யமே யன்றி ஒருநாளும் தர்க்கஸித்தயாகாது. பரமபுருஷனுக்கு ஜ்ஞாநியானவன் அத்யர்த்தப்ரியனென்பதும் இவனைப் பெற்றுக் களிப்பதற்கு அவன் நெடுங்காலம் தவம்புரிந்தன னென்பதும் [இப்படிப்பட்ட ப்ரியனை ஒருகாலும் ஸம்ஸா ரபந்தத்திற்குத் திருப்பியனுப்பமாட்டானென்பதும்] சாஸ் த்ரங்கொண்டேயன்றோ பாஷ்யகாரரால் இங்கு நிரூபிக்

கப்பட்டன. * ய ஏவமாஹ * என்று தொடங்கி ஸ்பஷ்டமாக சாஸ்த்ரத்தையேயன்றோ காட்டியருளினர். முக்தைச்வர்யமொன்று உண்டென்பதும் சாஸ்த்ரவேத்யம். அது பரமபுருஷாயத்தமென்பதும் சாஸ்த்ர வேத்யம். அந்த பரமபுருஷன் ஸ்வதந்த்ரன் ஸத்யஸங்கல்பன் என்பதும் சாஸ்த்ரவேத்யம். இப்படியானபோது அவன் முக்தனைத் திருப்பியனுப்பமாட்டானென்பதும் சாஸ்த்ரைகவேத்யமாகக் கூடியதேயல்லது தர்க்கமாத்ர கம்யமாகாது?

* அநாவ்ருத்திச் சப்தாத் * என்றவளவால் முக்தஸ்ய புநராவ்ருத்தி ஸம்பவா சங்கைக்குப் பரிஹாரம் வந்துவிட்டதா இல்லையா? என்பதையும் விமர்சிப்போம். ஈச்வரன் ஸ்வதந்த்ரன் என்றால் அவன் பைத்தியக்காரன், தன் தலை வெட்டி என்று அர்த்தம், தானிட்ட வேலியைத் தானே அழித்துவிடமாட்டாத ப்ரபுவன்றோ அவன். மஹாராஜா ஸ்வதந்த்ரனென்றால் சட்டங்களை மீறி மனம் போனபடியெல்லாம் தான்தோன்றியாகத் திரியுமவன் என்று அர்த்தம்? அப்படிப்பட்டவன் ப்ரபுவாயிருக்க முடியுமோ? அவனது கோலின்கீழே ஒருவர் வாழமுடியுமோ? பகவான் ஸ்வதந்த்ரனென்றால் சாஸ்த்ரங்களை மீறி நடப்பவனென்கிற அர்த்தம் ஒருகாலுமில்லை. அப்படி கொண்டால் அந்த பகவான் அசடு என்றே தேறவேண்டும். அன்னவனைக் கொண்டு நமக்கொரு பணியில்லை. அவன் நிரங்குச ஸ்வதந்த்ரனென்பது உண்மையே. அந்த ரஹஸ்யம் தனிப்பட விமர்சிக்கத்தகுந்தது. பகவான் ஸ்வதந்த்ரனுகையாலே முக்தனையும் ஒருகால் தள்ளிவிடக் கூடுமே என்று சங்கித்தவன் சாஸ்த்ரத்தினால் சங்காபரிகாரமடையவில்லையென்றால் வேறு எதனாலும் அவன் பரிஹாரமடையமுடி

யாதென்பது திண்ணம். ஒரு ஜ்ஞானியைப் பெறுவதற்குக் கோரமாதவம்புரிந்த கோமான் அந்த ஜ்ஞானியைப் பெற்று அவனைத் திருப்பியனுப்ப நினைப்பனோ? என்று ஸ்ரீபாஷ்யகாரரருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்தியினால் சாஸ்த்ர விச்வாஸமற்ற அதிகாரிக்கு சங்காபரிஹாரம் வந்துவிடுமோவென்று சிறிது ஆராய்ந்து பார்க்கலாமே. பகவானை ஸ்வதந்த்ரனென்று முடித்தபின்பு அவன் எதுதான்செய்யவில்லான். * சீமாலிகனவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமாறவனை நீயெண்ணிச் சக்கரத்தால் தலை கொண்டாய் * என்பதுபோன்றபாசுரங்களுமுள்ளனவே. இதிஹாஸபுராணங்களில் கதைகளுக்கோரளவில்லை. ஸ்வதந்த்ரனுக்கு, ப்ரியதமனானவனே அப்ரியனாவதற்கு எத்தனை நிமிஷமாகும். இதையும் ஒரு சங்கையாகக் கொள்க. இந்த சங்காபரிஹாரத்திற்கு இனித்தான் ஸூத்ரமும் பாஷ்யமும் அவதரிக்கவேணும். அல்லது, அவதரித்துள்ள ஸூத்ரபாஷ்யங்களினாலேயே இந்த சங்கையுங்கூட பரிஹ்ருதமாயிற்றென்னில், தினவடங்க நிரூபிக்க.

வஸ்துதஸ்து, இங்கு ஸ்ரீபாஷ்யத்தில் *ஸச பரம புருஷஸ் ஸத்யஸங்கல்ப: அத்யர்த்தப்ரியம் ஜ்ஞாநிநம் லப்த்வா * என்ற ஸ்ரீ ஸூக்தி அவதரித்தது எதற்காகவென்னில், பரம புருஷனைப் பெறுவது சேதநனுக்கே புருஷார்த்தமென்றும், இவன் தானே உபாயாநுஷ்டானங்களைப் பண்ணி அவனைப் பெறவேணுமென்றும், இவனே போக்தா வென்றும்........இப்படியெல்லாம் தலை கீழாகச் சொல்லி வருகிற ஏக தேசிகளின் வாதங்கள் ஆழ்வாருளிச் செயலைப் பேணுங்குடியிலே தலை காட்டத் தகா என்பது நம்மிராமாநுசனுடைய ஸ்வச்சமான திருவுள்

